# பகுதி IV

# பகுதி IV

## 2018 ஆம் ஆண்டின் இலங்கை மத்திய வங்கியினதும் இலங்கையிலுள்ள வங்கித்தொழில் நிறுவனங்களினதும் செயற்பாடுகள் மற்றும் தொழிற்பாடுகள் தொடர்பான முக்கிய சட்டவாக்கங்கள் (அ)


பக்கம்

1. 2018ஆம் ஆண்டின் 8ஆம் இலக்க, தீவிரப் பொறுப்பு முகாமைச் சட்டம் 1


(அ) மத்திய வங்கியின் ஆண்டறிக்கையில் பிரசுரிக்கப்பட்டுள்ள உரைக்கும் அரசாங்க அச்சுத் திணைக்களத்தினால் பிரசுரிக்கப்பட்டுள்ள உரைக்குமிடையில் ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் அரசாங்க அச்சுத் திணைக்களத்தினால் பிரசுரிக்கப்பட்ட உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

## 2018ஆம் ஆண்டின் 8ஆம் இலக்க, தீவிரப் பொறுப்பு முகாமைச் சட்டம்

[2018ஆம் ஆண்டு மாச்சு மாதம் 28ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

### இலங்கையில் பொதுத் தனிசு முகாமையைச் சீராக்குவதற்குத் தீவிரப் பொறுப்பு முகாமை நோக்கத்துக்காக இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியே கடன்களைத் திரட்டுவதற்கு அதிகாரமளிப்பதற்கும்; அத்துடன் அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

1. இச்சட்டம், 2018ஆம் ஆண்டின் 8ஆம் இலக்க, தீவிரப் பொறுப்பு முகாமைச் சட்டம் என எடுத்துக் காட்டப்படலாமென்பதுடன், வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளை மூலம் அமைச்சர் நியமிக்கக்கூடியவாறான அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

2. இச்சட்டத்தின் குறிக்கோளானது, ஆபத்தின் சாதுரியமான அளவுடன் ஒத்ததாகவுள்ள நடுத்தர மற்றும் நீண்டகாலத்தின் போது இயன்றளவு குறைந்த ஆகுசெலவில் அரசாங்கத்தின் நிதியளித்தல் தேவைகளும் கொடுப்பனவுக் கடப்பாடுகளும் எதிர்கொள்ளப்படுவதனை உறுதிப்படுத்துவதற்குப் பொதுத் தனிசை முகாமை செய்தலாதல் வேண்டும்.

3. பாராளுமன்றம், குறிப்பிட்டவொரு நிதியாண்டின்போது காலத்துக்குக்காலம், தீர்மானத்தின் மூலம், அரசாங்கத்தின் பொதுத் தனிசுகளுக்கு மீள்நிதியளிக்கும் மற்றும் முன் நிதியளிக்கும் நோக்கங்களுக்காக அரசாங்கத்துக்காகவும் அதன் சார்பிலும், (422ஆம் அத்தியாயமான) பணச்சட்டம், (417ஆம் அத்தியாயமான) உள்நாட்டு திறைசேரி உண்டியல்கள் கட்டளைச்சட்டம், (420ஆம் அத்தியாயமான) பதிவுசெய்யப்பட்ட பங்குத்தொகுதிகள் மற்றும் பிணையங்கள் கட்டளைச்சட்டம், 1957ஆம் ஆண்டின் 29ஆம் இலக்க, வெளிநாட்டுக் கடன்கள் சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுட்பட, பணங்கள் திரட்டப்படுவதற்கு இயைபான சட்டங்களின் நியதிகளின்படி இலங்கையிலாயினுஞ்சரி அல்லது இலங்கைக்கு வெளியேயாயினுஞ்சரி, கடனொன்றாக, முற்போந்த நிதியாண்டின் முடிவிலுள்ளவாறாக மொத்த நிலுவையாகவுள்ள தனிசின் பத்து சதவீதத்தை விஞ்சாதிருக்க வேண்டியதும் குறிப்பிட்டவொரு நிதியாண்டின் போதானதுமான பணத்தொகையொன்றைத் திரட்டுவதற்கு அங்கீகாரமளிக்கலாம்.

4\. (1) அமைச்சர், அமைச்சரவையின் அங்கீகாரத்துடனும் இச்சட்டத்தின் 3ஆம் பிரிவினதும் (422ஆம் அத்தியாயமான) பணச் சட்டத்தின் 114ஆம் பிரிவினதும் ஏற்பாடுகளுக்கமையவும், பின்வருவனவுட்பட, பொதுத் தனிசுகளுக்கு மீள்நிதியளித்தலும் முன் நிதியளித்தலும் தொடர்பானவையும் அவற்றின் இடைநேர்விளைவானவையுமான கருமங்கள் பற்றி முடிபுசெய்தல் வேண்டும்:-

(அ) ஒரு கடனின்மூலம் திரட்டப்படவேண்டிய பணத் தொகை;

(ஆ) அத்தகைய கடனைத் திரட்டுகின்ற விதம்; அத்துடன்

(இ) ஏலவேயுள்ள தனிசை மீளவாங்குதலும் ஏலவேயுள்ள தனிசை புதிய தனிசுடன் மாற்றுதலும் உட்பட, அவர் கருதக்கூடியவாறாக அரசாங்கத்தின் அத்தகைய கொடுப்பனவுக் கடப்பாடுகள் தீர்த்து வைக்கப்படுகின்ற முறை.

(2) ஓராம் உட்பிரிவின் கீழ் அமைச்சரினால் ஆக்கப்பட்ட முடிபு, இலங்கை மத்திய வங்கி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரினூடாகப் பதிவாளருக்கு எழுத்தில் அறிவிக்கப்படுதல் வேண்டும்.

(3) பதிவாளர், அத்தகைய தொடர்பாடலின் நியதிகளுக்கும் அதற்கென அமைச்சர் வழங்கக்கூடியவாறான எவையேனும் பணிப்புக்களுக்கும் அமைய, -

(அ) அத்தகைய கடனைத் திரட்டுவதற்கு அவசியமாக விருக்கக்கூடியவாறான அத்தகைய எல்லா ஒழுங்கேற்பாடுகளையும் செய்யலாம்; அத்துடன்

(ஆ) அரசாங்கத்தின் நலன்கருதி பெறப்படக்கூடிய மிகச் சிறந்த அனுகூலம்வாய்ந்த நியதிகளின் மேல் அரசாங்கத்தின் கடப்பாடுகளைத் தீர்த்து வைப்பதற்கு அத்தகைய ஒழுங்கேற்பாடுகளைச் செய்யலாம்.

5. அரசாங்கத்தின் மீள்நிதியளிக்கும் மற்றும் முன் நிதியளிக்கும் நோக்கங்களுக்காக அரசாங்கத்துக்காகவும் அதன் சார்பிலும் திரட்டப்பட்ட ஏதேனும் கடன், 2017ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 2(1) (ஆ) பிரிவின் ஏற்பாடுகளினது ஏற்புடைமையிலிருந்தும் 2017ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டம் தொடங்கும் தேதிக்குப் பின்னர் இயற்றப்படும் ஏதேனும் வருடாந்த ஒதுக்கீட்டுச் சட்டத்தின் ஏற்பாடுகளினது ஏற்புடைமையிலிருந்தும் விலக்களிக்கப்படுதல் வேண்டும்.

6\. (1) இச்சட்டத்தின் கீழ் திரட்டப்பட்ட ஏதேனும் கடன்:-

(அ) பண அலகு இலங்கை ரூபாக்களாகவிருக்குமிடத்து, (422ஆம் அத்தியாயமான) பணச் சட்டத்தின் 107ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய இலங்கை மத்திய வங்கியில் அல்லது உரிமமளிக்கப்பட்டவொரு வர்த்தக வங்கியில், அதற்கென எழுத்தில் திறைசேரிச் செயலாளரினால் பெயர் குறித்து நியமிக்கப்படக்கூடியவாறாகத் திறைசேரிப் பிரதிச் செயலாளரினால் பேணப்பட்ட ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட கணக்குகளில் வைத்திருக்கப்படுதல் வேண்டும்;

(ஆ) பண அலகு வெளிநாட்டு நாணயமாகவிருக்குமிடத்து, இலங்கை மத்திய வங்கியில், அதற்கென எழுத்தில் திறைசேரிச் செயலாளரினால் பெயர் குறித்து நியமிக்கப்படக்கூடியவாறாகத் திறைசேரிப் பிரதிச் செயலாளரினால் பேணப்பட்ட ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட கணக்குகளில் வைத்திருக்கப்படுதல் வேண்டும்.

(2) இலங்கை மத்திய வங்கியில் அல்லது உரிமமளிக்கப்பட்ட ஒரு வர்த்தக வங்கியில் பேணப்பட்ட ஏதேனும் கணக்கில் முதலாகவுள்ள பணமும், வட்டி ஏதேனும் இருப்பின் அதுவும், இலங்கையில் சொத்துக்களாக ஆனால் ஒரு வரைவிடப்பட்ட கணக்கொன்றாகத் திரட்டு நிதியத்தின் பாகமாகவிருத்தல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின் கீழ் வைத்திருக்கப்பட்ட பணங்கள், இச்சட்டத்தின் குறிக்கோளை எய்துவதில் பொதுத் தனிசுகளுக்கு மீள்நிதியளிக்கும் மற்றும் முன் நிதியளிக்கும் நோக்கங்களுக்காக மட்டுமே பயன்படுத்தப்படுதல் வேண்டும்.

7. இச்சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் திரட்டப்பட்ட எல்லாக் கடன்களும் மற்றும் இலங்கை மத்திய வங்கியில் அல்லது உரிமமளிக்கப்பட்டவொரு வர்த்தக வங்கியில் பேணப்பட்ட கணக்குகளில் வைத்திருக்கப்பட்ட பணம் மற்றும் அரசாங்கத்தினால் செய்யப்பட்ட கடப்பாடுகளைத் தீர்த்துவைத்தல் என்பன பற்றிய எல்லா விபரங்களும், 2003ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க, நிதி முகாமை (பொறுப்புச்) சட்டத்தின் கீழ் பாராளுமன்றத்தில் இடப்படுவதற்குத் தேவைப்படுத்தப்படுகின்றவையும், அரசாங்கத்தின் நிதிச் செயல் நிறைவேற்றம் தொடர்பானவையுமான அறிக்கைகளில் உள்ளடக்கப்படுதல் வேண்டும்.

8. வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், இச்சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் தயாரிக்கப்பட்ட அல்லது பயன்படுத்தப்பட்ட எல்லா ஆவணங்களும் அல்லது சாதனங்களும் முத்திரைத் தீர்வை அற்றனவாகவிருத்தல் வேண்டும்.

9. (1) பணச் சபையின் உறுப்பினரெவரும் அல்லது இலங்கை மத்திய வங்கியின் அலுவலர் அல்லது சேவையாளர் எவரும், இலங்கை மத்திய வங்கியினால் உறப்பட்ட ஏதேனும் சேதத்துக்காக அல்லது நட்டத்துக்காக, அத்தகைய சேதம் அல்லது நட்டம் அவரது வேண்டுமென்ற துர்நடத்தையினால் அல்லது வேண்டு மென்ற தவறுகையினால் விளைவிக்கப்பட்டிருந்தாலொழிய ஆளாதலாகாது.

(2) பணச்சபையின் உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் மற்றும் இலங்கை மத்திய வங்கியின் அலுவலர் அல்லது சேவையாளர் ஒவ்வொருவருக்கும், அவரது கடமைகளை நிறைவேற்றுவதில் அல்லது நிறைவேற்றுதல் தொடர்பாக அவரினால் உறப்பட்ட எல்லா நட்டங்களுக்கும் செலவுகளுக்கும் எதிராக, அவரது துர்நடத்தையினால் அல்லது வேண்டுமென்ற தவறுகையினால் ஏற்படுத்தப்பட்டுள்ளவெனப் பணச்சபை கருதக்கூடியவாறான அத்தகைய நட்டங்களும் செலவுகளும் தவிர, இலங்கை மத்திய வங்கியினால் நட்டோத்தரவாதமளிக்கப்படுதல் வேண்டும்.

10. (1) விதித்துரைக்கப்படவேண்டுமென இச்சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்ட கருமங்கள் தொடர்பில் அல்லது எக்கருமங்கள் தொடர்பில் ஒழுங்குவிதிகள் ஆக்கப்படவேண்டுமென இச்சட்டத்தினால் அதிகாரமளிக்கப்படுகின்றதோ அக்கருமங்கள் தொடர்பில் அமைச்சர் பணச்சபையின் மதியுரையின் மீது ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

(2) குறிப்பாகவும் (1)ஆம் உட்பிரிவினால் அளிக்கப்பட்ட தத்துவங்களின் பொதுமைக்குப் பங்கமின்றியும், அமைச்சர் பின்வரும் எல்லாக் கருமங்கள் தொடர்பிலும் அல்லது அவற்றுள் எவை தொடர்பிலும் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்:-

(அ) எந்த நிபந்தனைகளுக்கமைய தனிசுக்கு மீள்நிதியளிக்கப்படலாமோ மற்றும் முன் நிதியளிக்கப்படலாமோ அந்த நிபந்தனைகள்;

(ஆ) தனிசுக்கு மீள்நிதியளிக்கும் மற்றும் முன் நிதியளிக்கும் முறையும், ஏற்புடையற்பாலனவான நடவடிக்கை முறைகளும்; அத்துடன்

(இ) இச்சட்டத்தின் குறிக்கோளை எய்தும் நோக்கத்துக்கு அவசியமாகக்கூடியவாறான வேறெவையேனும் கருமங்கள்.

(3) அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று அல்லது அந்த ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்குவருதலும் வேண்டும்.

(4) அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி ஒவ்வொன்றும், அது வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பின்னர் மூன்று மாதங்களினுள் அங்கீகாரத்துக்காகப் பாராளுமன்றத்தின் முன்னர் கொணரப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத அத்தகைய ஏதேனும் ஒழுங்குவிதி, அதற்கு அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து, ஆனால் அதன் கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி, ஒழிக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(5) அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதி எத்தேதியன்று ஒழிக்கப்பட்டுவிட்டதாக அவ்வாறு கருதப்படுகின்றதோ அத்தேதி பற்றிய அறிவிப்பு வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

11. அமைச்சர், இச்சட்டத்தினால் அமைச்சருக்களிக்கப்பட்ட ஏதேனும் தத்துவத்தை 4ஆம், 10ஆம் பிரிவுகளின் கீழ் தவிர, வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளையின்மூலம், அக்கட்டளையிற் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய நிபந்தனைகள், ஒதுக்கங்கள் மற்றும் மட்டுப்பாடுகளுக்கமைய, திறைசேரிச் செயலாளருக்குக் கையளிக்கலாம்.

12. இச்சட்டத்தின் ஏற்பாடுகளுள் எவற்றையும் மீறுகின்ற எவரேனுமாள் இச்சட்டத்தின்கீழான தவறொன்றைப் புரிகின்றாரென்பதுடன், நீதிவானொருவரினால் சுருக்க விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மேல், ஐந்தாண்டுகளை விஞ்சாதவொரு காலத்துக்கான மறியற்றண்டனைக்கு அல்லது மூன்று மில்லியன் ரூபாவுக்குக் குறையாததும் பத்து மில்லியன் ரூபாவை விஞ்சாததுமான குற்றப்பணமொன்றுக்கு அல்லது அத்தவறானது அரசாங்கத்துக்குப் பணவகையான நட்டத்தை அல்லது பணவகையான நியதிகளில் அளவிடப்படத்தக்கவொரு நட்டத்தை விளைவித்துள்ளவிடத்து, அத்தகைய நட்டத்தின் இரட்டித்த பெறுமதிக்குச் சமமான குற்றப்பணமொன்றுக்கு அல்லது அத்தகைய மறியற்றண்டனை, குற்றப்பணம் ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

13. இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் இடையே ஏதேனும் முரண்பாடு அல்லது ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், இச்சட்டத்தின் ஏற்பாடுகள் மேலோங்கி நிற்றல் வேண்டும்.

14. இச்சட்டத்தில், சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப் படுத்தினாலொழிய-

“இலங்கை மத்திய வங்கி” என்பது, (422ஆம் அத்தியாயமான) பணச்சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை மத்திய வங்கி என்று பொருளாகும்;

“நிதியாண்டு” என்பது, சனவரி முதலாம் நாளன்று தொடங்குகின்றதும் திசெம்பர் முப்பத்தோராம் நாளன்று முடிவடைகின்றதுமான பன்னிரெண்டு மாதக் காலப்பகுதி என்று பொருளாகும்;

“உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கி” என்பது, 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க, வங்கித்தொழிற் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் வர்த்தகச் செயற்பாடுகளைக் கொண்டு நடாத்துவதற்கு உரிமமளிக்கப்பட்டவொரு வங்கி என்று பொருளாகும்;

"அமைச்சர்" என்பது, நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சர் என்று பொருளாகும்;

"பணச்சபை" என்பது, (422ஆம் அத்தியாயமான) பணச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை மத்திய வங்கியின் பணச்சபை என்று பொருளாகும்;

"முன் நிதியளித்தல்" என்பது, ஏலவேயுள்ள நிலுவையான தனிசொன்றின் நியதிநிபந்தனைகளை மாற்றுவதற்கென அத்தகைய தனிசை மீளக்கட்டமைப்பதற்கு முன்கூட்டியே செய்யப்பட்ட நிதிசார் ஒழுங்கேற்பாடுகளை உள்ளடக்கும்;

"பொதுத் தனிசு" என்பது, அரசாங்கத்தினால் திரட்டப்பட்ட அல்லது உத்தரவாதமளிக்கப்பட்ட கடன்களின் விளைவான எல்லா நிதிசார் கடப்பாடுகளும் மற்றும் வழங்கப்பட்ட அல்லது உத்தரவாதமளிக்கப்பட்ட பிணையங்களும் என்று பொருளாகும் என்பதுடன், அத்தனிசின் மீதான வட்டி, கடனாழ் நிதிய விதிப்பனவுகள், தனிசின் மீள்கொடுப்பனவு அல்லது கடன்தீர்வு மற்றும் அரசாங்கத்தின் அரசிறைகளினது பிணைப்பொறுப்பின் மீதும் அதன் மூலம் உருவாக்கப்பட்ட தனிசின் சேவை மற்றும் மீட்பின் மீதுமான கடன்களைத் திரட்டுதலுடன் சம்பந்தப்பட்ட எல்லாச் செலவினமும் என்பவற்றை உள்ளடக்கும்;

"மீள்நிதியளித்தல்" என்பது, ஏலவேயுள்ள நிலுவையானவொரு தனிசை அல்லது தனிசுகளை வேறொரு தனிசுடன் அல்லது தனிசுகளுடன் பதிலீடு செய்தலை உள்ளடக்கும்; அத்துடன்

"பதிவாளர்" என்பது, (420ஆம் அத்தியாயமான) பதிவு செய்யப்பட்ட பங்குத்தொகுதிகள் மற்றும் பிணையங்கள் கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் நியமிக்கப்பட்ட பதிவாளர் என்று பொருளாகும்.

15. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.